**In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti**

**Deposition of Witness**

C.C. 510/2015

PW-2 06-04-2024

| | |
|---|---|
| Name | செந்தில்குமார் |
| Father's/Husband's Name | பொம்முசாமி |
| Village | கோவில்பட்டி |
| Taluk | கோவில்பட்டி |
| Caste | – |
| Calling | தனியார் நிறுவனம் |
| Religion | – |
| Age | 29 |

(A1 to A3 absent. Petition filed and allowed)

**முதல்விசாரணை**

1) நான் தற்போது கோவில்பட்டியில் வசிக்கிறேன். நான் நான் விஒ கம்பெனியில் குழு தலைவராக வேலை செய்கிறேன். 11.10.2015 ம் ஆண்டு இகாம் எக்ஸ்பிரஸ் என்ற கொரியர் நிறுவனத்தில் டெலிவரி அலுவலராக பணியில் இருந்தபோது வழக்கமாக அன்று பெறப்பட்ட பணம் அனைத்தையும் அலுவலகத்தில் உள்ள லாக்கரில் வைப்பது வழக்கம்.

2) வழக்கமாக இரவு 09.30 மணிக்கு அலுவலக நேரம் முடிந்து கதவை பூட்டிவிடுவோம். மறுநாள் 12.10.2015 தேதி காலை 08.30 மணிக்கு அலுவலகத்திற்கு சென்றபோது சட்டர் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது, உள்ளே சென்று பார்த்தபோது லாக்கர் இல்லை.

3) உடனே என்னுடைய மேலாளருக்கு தகவல் கொடுத்தோம். அதன்பின்பு மேற்கு காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) புகார்மனு கொடுத்த சூப்பர்வைசர் பாலசுப்ரமணியன் ஆவார். சம்பவம் நடக்கும்போது இகாம் எக்ஸ்பிரஸ் என்ற கொரியர் நிறுவனத்தில் பணிபுரிந்ததற்கு ஆதரமாக ஆவணம் எதையும் போலிசார் விசாரணையின்போது கொடுத்தேனா என்றால் இல்லை.

2) சம்பவத்தன்று பணியில் இருந்தேன் என்பதற்கு ஆதாரம் எதுவும் கொடுத்தேனா என்றால் நான் கொடுக்கவில்லை அலுவலகத்தில் இருந்து பெற்றிருக்கலாம்.

3) கம்பெனியின் வரவுசெலவு சம்மந்தமாக பார்த்துக்கொள்வதற்கு அதற்கென வேறு ஒரு அலுவலர் உண்டு. எவ்வளவு பணம் வரவு செலவு என்பதும் அன்று பெறப்பட்ட பணம் எங்கு வைக்கப்படுகிறது யாரால் வைக்கப்படுகிறது என்ற விபர்ம் எனக்கு தெரியாது.

4) அலுவலகத்தைவிட்டு இரவு வீடு திரும்பும் போது அலுவலக கதவை பூட்டுவதற்கென்று வேறு ஒரு நபர் உண்டு என்றால் சரியல்ல. நான் அலுவலகம் சென்று பார்த்தபோது பூட்டு உடைக்கப்பட்டு சட்டரோடு இருந்ததா அல்லது தனியாக கிடந்ததா என்றால் பூட்டு அறுக்கப்பட்டு கிடந்தது.

5) நான் சென்று பார்த்தபோது சட்டர் கொஞ்சம் திறந்து உயர்த்தப்பட்ட நிலையில் இருந்தது. தகவல் கொடுத்ததும் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள். பாலசுப்ரமணியனிடம் புகார்மனு எழுதி வாங்கிக்கொண்டார்கள்.

6) சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் யார் என்ற விபரம் எனக்கு தெரியாது போலிசார் சொல்லிதான் தெரியும். நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சொன்ன

நாளில் மேற்கண்ட சம்பவம் நடக்கவில்லை என்றாலும் மேல் அதிகாரிகளின் கேட்டுக்கொண்டதன்பேரிலும் போலிசார் சொல்லியும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது )**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்),B.பீட்டர்,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.